10—

மாணவர் விடுதி

***59853—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் பேரூராட்சிப் பகுதியில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி தொடங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய விடுதிகள் தொடங்கும் திட்டம் பரிசீலனையில் தற்போது இல்லை.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான குத்தாலத்தில் மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், உதவி பெறும் பள்ளிகள் ஏராளமாக உள்ளன. தொலைதூரத்திலிருந்து ஆதிதிராவிட மாணவர்கள் கல்வி கற்க வருகின்றார்கள். அவர்கள் தங்கிப் படிப்பதற்கு மாணவர் விடுதி இல்லாமல் பெரிதும் கஷ்டப்படுகின்றார்கள். இந்தியாவிலேயே தமிழகத்தில் உள்ள மாணவர்களை தலைசிறந்த மாணவர்களாக உருவாக்க வேண்டும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்வித் துறையில் பல்வேறு அதிரடித் திட்டங்களைத் தந்துகொண்டிருக்கின்ற இந்த வேளையில் ஆதிதிராவிட மாணவர் நலன் கருதி மாணவர் விடுதியை அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய விடுதிகள் பகுதி–2 திட்டத்தின்கீழ் தேவை மற்றும் நிதி நிலைமைக்கேற்ப திறக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் பகுதி–2 திட்டத்தில் சென்னையில் முதுகலைப் பட்டப் படிப்பு பயிலும் மாணவியர்களுக்காக ஒரு விடுதியும், கரூர் நகரத்தில் பட்டப் படிப்பு பயிலும் மாணவியர்களுக்காகச் சிறப்பு இனமாக ஒரு விடுதியும், அதேபோல் நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் கல்லூரி மாணவியருக்காக ஒரு விடுதியும் திறக்கப்பட்டு, தற்போது இத்துறையின்கீழ் 1,078 ஆதிதிராவிடர்

2005 செப்டம்பர் 22]

நல விடுதிகளும், 26 பழங்குடியினர் நல விடுதிகளும் இயங்கி வருகின்றன. இவற்றில் 574 விடுதிகள் தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்தன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இந்த விடுதிகளுக்கு அனைத்து நவீன வசதிகளுடன்கூடிய அரசு சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டதன்பேரில் தற்போது 302 விடுதிகளுக்கு அரசுக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதி விடுதிகளுக்குக் கட்டடப் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. இதற்கு ஆகும் செலவு, ஒரு விடுதிக்கு ரூபாய் 31.50 இலட்சம் என்ற மதிப்பீட்டில் சுமார் ரூபாய் 180.81 கோடி ஆகும். இந்த விடுதிகளில் சுமார் 79,500 மாணவ, மாணவியர்கள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர். இவர்களுக்கு உணவுக் கட்டணமாகச் சுமார் 40 கோடி ரூபாய் ஒரு ஆண்டுக்குச் செலவு ஆகிறது.

மேலும், 1,078 விடுதிகள் அனைத்திற்கும் சமையல் எரிவாயு இணைப்பு வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மேலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, குறிப்பாக தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியர்கள் கல்வியில் உயர வேண்டும் என்கிற சீரிய நோக்கோடு, ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இந்தியாவிலேயே முதன் முதலாக இலவச சைக்கிள் திட்டம், மாணவ, மாணவியர்களுக்கு, பிளஸ் 1, பிளஸ் 2 மாணவியர்களுக்கு இலவச சைக்கிள் திட்டத்தைக் கொண்டு வந்து, (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 4 ஆண்டுகளில் 2,05,000 மாணவிகள் சைக்கிள் வாங்கி பயன்பெற்றுள்ளார்கள்.

இந்த ஆண்டில் அதேபோல் மாணவியர்களுக்கு 50,000 சைக்கிள்களும், 1,00,000 மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாளன்று (மேசையைத் தட்டும் ஒலி) மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் சைக்கிளை வழங்கி வருகிறார்கள். இதற்காக மொத்தம் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இலவச சைக்கிள் திட்டத்திற்கு மட்டும் 60 கோடி ரூபாய் ஆகிறது. கிட்டத்தட்ட 2,50,000 மாணவியர்களும், 1,00,000 மாணவர்களும் பயன்பெறுகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு படிக்கின்ற மாணவ, மாணவியர்கள் உயர் கல்விக்கு இதுவரையிலும் மற்ற ஆட்சிகளில் வாங்கி வந்த கல்விக் கடனை மாண்புமிகு அம்மா அவர்கள் தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியர்கள் கல்வியில் உயர வேண்டும், அவர்களுடைய கஷ்டத்தைப் போக்கவேண்டும் என்கிற சீரிய நோக்கோடு உயர் கல்விபெற முழு மானியத்தை அறிவிப்பு செய்து, கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் கிட்டத்தட்ட 18.7 கோடி ரூபாய் செலவில் 28,000 மாணவ, மாணவியர்கள் பயன்பெற்றுள்ளார்கள்.

இப்படி பல்வேறு வகைகளில், எந்த ஆட்சியிலும் நடைபெறாத, எந்த முதலமைச்சரும் கொண்டு வராத திட்டங்களைக் கொண்டு வந்து (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தியாவிற்கே முன்னோடி முதலமைச்சராக விளங்குகிறார்கள். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியர்கள் கல்வியில் தரம் உயர்வு பெற்று வருகிறார்கள். இலவச சைக்கிள் திட்டத்தின் மூலமாக கல்வியிலும் உயர்வு பெற்றிருக்கிறார்கள், உடல் நலத்தோடு சுகாதாரத்திலும் நல்லமுறையில் அவர்கள் வளர்ந்து வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கோரிய கோரிக்கை, புதிய விடுதிகள் தொடங்கவேண்டும் என்றும், அதனை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். கண்டிப்பாக— முறையாக நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு செல்வோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று மறுபரிசீலனை செய்யப்படும் என்று சொன்னதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 11, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.